
Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

वाक्यवृत्तिः

வாக்யவ்ரு'த்தி:

ஸ்வர்ண பா4ரதீ

வரிசை எண் 13

We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.

शृङ्गगिरिः १३.४.२०२४

दक्षिणाम्नायशृङ्गेरीशारदापीठाधीश्वराणाम् अनन्तश्रीविभूषितानां परमपूज्यानां जगद्गुरु शङ्कराचार्याणां श्रीभारतीतीर्थमहास्वामिनां संन्याश्रमस्वीकारस्वर्णमहोत्सवसन्दर्भं पुरस्कृत्य मुद्रितचराणां अधुना दुर्लभंगतानां विशिष्टानां गैर्वाणीग्रन्थाणां अन्तर्जालमाध्यमेन पुनः प्रकाशनं क्रियत इति विदित्वा जगद्गुरुचरणाः नितराममोदन्त । श्रीशारदाचन्द्रमौलीश्वरयोरसीमया कृपया कार्यमिदं सुष्ठु प्रवर्तताम्, कार्येऽस्मिन् कृतसाह्यास्समेऽपि सज्जनाः श्रेयांसि समधिगच्छन्त्विति च श्रीजगद्गुरुचरणा आशासते ।

इति निवेदयिता

दि दक्षिणामूर्तिः

Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792
E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org

ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிநானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் பொற்பாதங்களில் எங்களின் முயற்சியை சமர்ப்பிக்கிறோம்.

பூஜ்யஸ்ரீ ஸ்வாமி பூர்ணானந்தர், ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்த ஆஸ்ரமம், தேனி, அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள் . ஸ்வாமிஜி அவர்கள் இந்த வாக்கிய வ்ருத்தி என்னும் க்ரந்தத்தை மிகவும் எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் நமக்கு வழங்கியுள்ளார்கள்.

இப்படிக்கு,
ஸ்ரீமதி வீரமணி.

॥श्रीगुरुवन्दनम्॥

श्रीगुरुभ्यो नमः

शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किङ्करी यस्य सा माया शङ्कराचार्यमाश्रये ॥
प्रह्लादवरदो देवो यो नृसिंहः परो हरिः ।
नृसिंहोपासकं नित्यं तं नृसिंहगुरुं भजे ॥
श्रीसच्चिदानन्दशिवाभिनव्यनृसिंहभारत्यभिधान् यतीन्द्रान् ।
विद्यानिधीन् मन्त्रनिधीन् सदात्मनिष्ठान् भजे मानवशम्भुरूपान् ॥
सदात्मध्याननिरतं विषयेभ्यः पराङ्मुखम् ।
नौमि शास्त्रेषु निष्णातं चन्द्रशेखरभारतीम् ॥
विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।
सदाभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ॥
अज्ञानां जाह्नवीतीर्थं विद्यातीर्थं विवेकिनाम् ।
सर्वेषां सुखदं तीर्थं भारतीतीर्थमाश्रये ॥
विद्याविनयसम्पन्नं वीतरागं विवेकिनम् ।
वन्दे वेदान्ततत्त्वज्ञं विधुशेखरभारतीम् ॥
पञ्चाशल्लिपिभिर्विभक्तमुखदोः पन्मध्यवक्षस्थलां
भास्वन्मौलिनिबद्धचन्द्रशकलामापीनतुङ्गस्तनीम् ।
मुद्रामक्षगुणं सुधाढ्यकलशं
विद्याञ्च हस्ताम्बुजैः
बिभ्राणां विशदप्रभां त्रिनयनां वाग्देवतामाश्रये ॥

श्रीमत्परमहंस-परिव्राजकाचार्यवर्य-पदवाक्यप्रमाणपारावारपारीण-यमनियमासनप्राणायामप्रत्याहारधारणाध्यानसमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ-तपश्चक्रवर्ति-अनाद्यविच्छिन्नश्रीशङ्कराचार्यगुरुपरंपराप्राप्त-षड्दर्शनस्थापनाचार्य-व्याख्यानसिंहासनाधीश्वर-सकलनिगमागमसारहृदय-सांख्यत्रयप्रतिपादक-वैदिकमार्गप्रवर्तक-सर्वतन्त्रस्वतन्त्र-आदिराजधानी-विद्यानगरमहाराजधानी-कर्णाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य-श्रीमद्राजाधिराजगुरु-भूमण्डलाचार्य-ऋष्यशृङ्गपुरवराधीश्वर-तुङ्गभद्रातीरवासि-श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक-

श्रीमज्जगद्गुरु-श्रीमदभिनवविद्यातीर्थमहास्वामिगुरुकरकमलसञ्जात-

श्रीमज्जगद्गुरु-श्रीभारतीतीर्थमहास्वामिनां-

तत्करकमलसञ्जात-श्रीमज्जगद्गुरु-श्रीविधुशेखरभारतीमहास्वामिनां च चरणारविन्दयोः साष्टाङ्गप्रणामान् समर्पयामः ॥

||ஶ்ரீகு³ருவந்த³னம்||
ஶ்ரீகு³ருப்⁴யோ நம:
ஶங்காரூபேண மச்சித்தம்’ பங்கீக்ரு’தமபூ⁴த்³யயா |
கிங்கரீ யஸ்ய ஸா மாயா ஶங்கராராசார்யமாஶ்ரயே ||
ப்ரஹ்லாத³வரதோ³ தே³வோ யோ ந்ரு’ஸிம்’ஹ: பரோ ஹரி: |
ந்ரு’ஸிம்’ஹோபாஸகம்’ நித்யம்’ தம்’ ந்ரு’ஸிம்’ஹகு³ரும்’ ப⁴ஜே ||
ஶ்ரீஸச்சிதா³னந்த³ஶிவாபி⁴நவ்யந்ரு’ஸிம்’ஹபா⁴ரத்யபி⁴தா⁴ன் யதீந்த்³ரான் |
வித்³யாநிதீ⁴ன் மந்த்ரநிதீ⁴ன் ஸதா³த்மநிஷ்டா²ன் ப⁴ஜே மானவஶம்பு⁴ரூபான் ||
ஸதா³த்மத்⁴யானநிரதம்’ விஷயேப்⁴ய: பராங்முக²ம் |
நௌமி ஶாஸ்த்ரேஷு நிஷ்ணாதம்’ சந்த்³ரஶேக²ரபா⁴ரதீம் ||
விவேகினம்’ மஹாப்ரஜ்ஞம்’ தை⁴ர்யௌதா³ர்யக்ஷமாநிதி⁴ம் |
ஸதா³பி⁴னவபூர்வம்’ தம்’ வித்³யாதீர்த²கு³ரும்’ ப⁴ஜே ||
அஜ்ஞானாம்’ ஜாஹ்னவீதீர்த²ம்’ வித்³யாதீர்த²ம்’ விவேகினாம் |
ஸர்வேஷாம்’ ஸுக²த³ம்’ தீர்த²ம்’ பா⁴ரதீதீர்த²மாஶ்ரயே ||
வித்³யாவினயஸம்பன்னம்’ வீதராக³ம்’ விவேகினம் |
வந்தே³ வேதா³ந்ததத்த்வஜ்ஞம்’ விது⁴ஶேக²ரபா⁴ரதீம் ||
பஞ்சாஶல்லிபிபி⁴ர்விப⁴க்தமுக²தோ³: பன்மத்⁴யவக்ஷஸ்த²லாம்’
பா⁴ஸ்வன்மௌலிநிப³த்³த⁴சந்த்³ரஶகலாமாபீனதுங்க³ஸ்தனீம் |
முத்³ராமக்ஷகு³ணம்’ ஸுதா⁴ட்⁴யகலஶம்’
வித்³யாஞ்ச ஹஸ்தாம்பு³ஜை:
பி³ப்⁴ராணாம்’ விஶத³ப்ரபா⁴ம்’ த்ரிநயனாம்’ வாக்³தே³வதாமாஶ்ரயே ||

ஶ்ரீமத்பரமஹம்’ஸ-பரிவ்ராஜகாசார்யவர்ய-பத³வாக்யப்ரமாணபாராவாரபாரீண-யமநியமாஸனப்ராணாயாமப்ரத்யாஹாரதா⁴ரணாத்⁴யானஸமாத்⁴யஷ்டாங்க³யோகா³னுஷ்டா²னநிஷ்ட²-தபஶ்சக்ரவர்தி-அநாத்³யவிச்சி²ன்னஶ்ரீஶங்கராசார்யகு³ருபரம்பராப்ராப்த-ஷட்³த³ர்ஶனஸ்தா²பனாசார்ய-வ்யாக்²யானஸிம்’ஹாஸனாதீ⁴ஶ்வர-ஸகலநிக³மாக³மஸாரஹ்ரு’த³ய-ஸாங்க்²யத்ரயப்ரதிபாத³க-வைதி³கமார்க³ப்ரவர்தக-ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர-ஆதி³ராஜதா⁴னீ-வித்³யாநக³ரமஹாராஜதா⁴னீ-கர்ணாடகஸிம்’ஹாஸனப்ரதிஷ்டா²பனாசார்ய-ஶ்ரீமத்³ராஜாதி⁴ராஜகு³ரு-பூ⁴மண்ட³லாசார்ய-ரு’ஷ்யஶ்ரு’ங்க³புரவராதீ⁴ஶ்வர-துங்க³ப⁴த்³ராதீரவாஸி-ஶ்ரீமத்³வித்³யாஶங்கரபாத³பத்³மாராத⁴க-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீமத³பி⁴னவவித்³யாதீர்த²மஹாஸ்வாமிகு³ருகரகமலஸஞ்ஜாத-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீபா⁴ரதீதீர்த²மஹாஸ்வாமினாம்’-தத்கரகமலஸஞ்ஜாத-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீவிது⁴ஶேக²ரபா⁴ரதீமஹாஸ்வாமினாம்’ ச சரணாரவிந்த³யோ: ஸாஷ்டாங்க³ப்ரணாமான் ஸமர்பயாம: ||

ஓம்
ஶ்ரீ குருப்யோ நம:

।। वाक्यवृत्तिः ।।

।। வாக்யவ்ரு’த்திः ।।

(1)

सर्गस्थितिप्रलयहेतुमचिन्त्यशक्तिं
विश्वेश्वरं विदितविश्वमनन्तमूर्तिम् ।
निर्मुक्तबन्धनमपारसुखाम्बुराशिं
श्रीवल्लभं विमलबोधघनं नमामि ।। १ ।।

ஸர்க³ஸ்தி²திப்ரலயஹேதுமசிந்த்யஶக்திம்
விஶ்வேஶ்வரம் விதி³தவிஶ்வமனந்தமூர்திம் ।
நிர்முக்தப³ந்த⁴னமபாரஸுகா²ம்பு³ராஶிம்
ஶ்ரீவல்லப⁴ம் விமலபோ³த⁴க⁴னம்’ நமாமி ।।

ஸர்க-ஸ்திதி-ப்ரலய-ஹேதும் அசிந்தயசக்திம்
விச்வேச்வரம் விதித-விச்வம் அநந்த-மூர்த்திம் ।
நிர்முக்த-பந்தநம் அபார-ஸுகாம்பு-ராசிம்
ஶ்ரீவல்லபம் விமல-போதகநம் நமாமி ।।

உலகின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் இவற்றிற்குக் காரணமானவரை, மனதினால் சிந்தித்தறிய இயலாத - எண்ணுதற்கொன்னா - சக்தி உடையவரை, உலகை ஆளும் ஈச்வரரை, உலகம் முழுவதையும் அறிந்தவரை, எல்லையற்ற வடிவுடையவரை, எவ்விதக்கட்டும் இல்லாதவரை, கரையிலா ஆனந்தக் கடலை, ஸகலவித ஸம்பத்தும் உள்ளவரை - ஶ்ரீ வல்லபரான மஹாவிஷ்ணுவை - தூய்மையான அறிவுவடிவானவரை வணங்குகிறேன். (1)

(2)

यस्य प्रसादादहमेव विष्णुः मय्येव सर्वं परिकल्पितं च ।
इत्थं विजानामि सदात्मरूपं तस्याङ्घ्रिपद्मं प्रणतोऽस्मि नित्यम् ।। २ ।।

யஸ்ய ப்ரஸாதா³த³ஹமேவ விஷ்ணு:
மய்யேவ ஸர்வம் பரிகல்பிதம் ச ।
இத்த²ம் விஜாநாமி ஸதா³த்மரூபம்
தஸ்யாங்க்⁴ரிபத்³மம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ।।

யஸ்ய ப்ரஸாதாத் அஹமேவ விஷ்ணு:
மய்யேவ ஸர்வம் பரிகல்பிதம் ச ।
இத்தம் விஜாநாமி ஸதாத்மரூபம்
தஸ்யாங்க்ரி-பத்மம் ப்ரணதோ(அ)ஸ்மி நித்யம் ।।

எவருடைய அருளால், நானே ப்ரஹ்மம், என்னிடத்திலேயே எல்லாம் நன்கு கல்பிக்கப்பட்டிருக்கிறது என்று இவ்வாறு மெய்ப்பொருளாக இருக்கும் என் ஸ்வரூபத்தை அறிகிறேனோ, அவருடைய திருவடித்தாமரையை எப்பொழுதும் வணங்குபவனாக இருக்கிறேன். (2)

(3)

तापत्रयार्कसन्तप्तः कश्चिदुद्विग्नमानसः ।
शमादिसाधनैर्युक्तः सद्गुरुं परिपृच्छति ।। ३ ।।

தாபத்ரயார்கஸந்தப்த: கஶ்சிது³த்³விக்³நமாநஸ: ।
ஶமாதி³ஸாத⁴நைர்யுக்த: ஸத்³கு³ரும் பரிப்ருச்ச²தி ।।

தாப-த்ரயார்க-ஸந்தப்த: கச்சித் உத்விக்ந-மாநஸ: ।
சமாதி-ஸாதநைர்-யுக்த: ஸத்குரும் பரிப்ருச்சதி ।।

(ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனும்) முத்தாபங்களாகிய ஸூர்யனால் நன்கு கொதிப்படைந்தவனான (இவற்றினிலிருந்து வெளியேற வேண்டுமெனும்) எழுச்சியுள்ள மனதுள்ளவனான ஒருவன், மனவடக்கம் முதலான பக்குவங்களுடன் கூடியவனாக ஸத்குருவை (அணுகி) முறையாகக் கேட்கிறான். (3)

(4)

अनायासेन येनास्मान्मुच्येय भवबन्धनात् ।
तन्मे संक्षिप्य भगवन् केवलं कृपया वद ।। ४ ।।

அநாயாஸேந யேநாஸ்மாந்முச்யேய ப⁴வப³ந்த⁴நாத் ।
தந்மே ஸங்க்ஷிப்ய ப⁴க³வன் கேவலம் க்ருபயா வத³ ।।

அநாயாஸேந யேநாஸ்மாத் முச்யேய பவபந்தநாத் ।
தந்மே ஸங்க்ஷிப்ய பகவந் கேவலம் க்ருபயா வத ।।

இந்தப் பிறவியாகிய கட்டிலிருந்து அதிக சிரமமில்லாமல் எந்த உபாயத்தினால் விடுபடுவேனோ அதை, பகவானே, பெருங்கருணையினாலே எனக்குச் சுருக்கமாக (தாங்கள்) அருள வேண்டும். (4)

(5)

साध्वी ते वचनव्यक्तिः प्रतिभाति वदामि ते ।
इदं तदिति विस्पष्टं सावधानमनाः श्रुणु ।। ५ ।।

ஸாத்⁴வீ தே வசநவ்யக்தி: ப்ரதிபா⁴தி வதா³மி தே ।
இத³ம் ததி³தி விஸ்பஷ்டம் ஸாவதா⁴நமநா: ஶ்ருணு ।।

ஸாத்வீ தே வசநவ்யக்தி: ப்ரதிபாதி வதாமி தே ।
இதம் தததி விஸ்பஷ்டம் ஸாவதாநமநா: ச்ருணு ।।

உனது வாக்கினால் வெளிப்பட்டது மிகவும் அழகான விளங்குகிறது (உனது மனக்கருத்து). இதுதான் அது என்று மிகத்தெளிவாக உனக்குச் சொல்கிறேன். கவனமான மனதுடன் கேட்பாயாக. (5)

(6)

तत्त्वमस्यादिवाक्योत्थं यज्जीवपरमात्मनोः ।
तादात्म्यविषयं ज्ञानं तदिदं मुक्तिसाधनम् ।। ६ ।।

தத்த்வமஸ்யாதி³வாக்யோத்த²ம் யஜ்ஜீவபரமாத்மநோ: ।
தாதா³த்ம்யவிஷயம் ஜ்ஞாநம் ததி³த³ம் முக்திஸாத⁴நம் ।।

தத்த்வமஸ்யாதி-வாக்யோத்தம் யஜ்ஜீவ-பரமாத்மநோ: ।
தாதாத்ம்ய-விஷயம் ஜ்ஞாநம் ததிதம் முக்திஸாதநம் ।।

'தத்த்வமஸி' முதலான (மஹா) வாக்யங்களிலிருந்து ஏற்படும் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள ஒரே தன்மையை (ஐக்யத்தை) விஷயமாகக் கொண்ட ஞானம் எதுவோ, அதுவே இந்த முக்திஸாதனம். (நீ கேட்ட பிறவிக்கட்டிலிருந்து விடுபடுவதற்கான உபாயம் ஆகும்.) (6)

(7)

को जीवः कः परश्चात्मा तादात्म्यं वा कथं तयोः ।
तत्त्वमस्यादिवाक्यं वा कथं तत्प्रतिपादयेत् ।। ७ ।।

கோ ஜீவ: க: பரஶ்சாத்மா தாதா³த்ம்யம் வா கத²ம் தயோ: ।
தத்த்வமஸ்யாதி³வாக்யம் வா கத²ம் தத்ப்ரதிபாத³யேத் ।।

கோ ஜீவ: க: பரச்சாத்மா தாதாத்ம்யம் வா கதம் தயோ: ।
தத்த்வமஸ்யாதி வாக்யம் வா கதம் தத்ப்ரதிபாதயேத் ।।

ஜீவன் யார் ? பரமாத்மா யார் ? அவ்விருவருக்கும் ஒன்றாய் இருக்கும் தன்மை எப்படி ? அதை "தத்த்வமஸி" முதலான வாக்யம் எப்படி விளக்கிக்காட்டும் ? (7)

(8)

अत्र ब्रूमः समाधानं कोऽन्यो जीवस्त्वमेव हि।
यस्त्वं पृच्छसि कोऽहं मां ब्रह्मैवासि न संशयः ।। ८ ।।

அத்ர ப்³ரூம: ஸமாதா⁴நம் கோSந்யோ ஜீவஸ்த்வமேவ ஹி ।
யஸ்த்வம் ப்ருச்ச²ஸி கோSஹம் மாம் ப்³ரஹ்மைவாஸி ந ஸம்ஶய: ।।

அத்ர ப்ரூம: ஸமாதாநம் கோ(அ)ந்யோ ஜீவஸ்த்வமேவ ஹி ।
யஸ்த்வம் ப்ருச்சஸி கோ(அ)ஹம் மாம் ப்ரஹ்மைவாஸி ந ஸம்சய: ।।

இவ்விஷயத்தில் ஸமாதானம் (விடை) கூறுகிறோம். ஜீவன் வேறு யார் ? நீயே தான். என்னைப் பார்த்து 'நான் யார்?' என்று எந்த நீ கேட்கிறாயோ, (அந்த நீ) ப்ரஹ்மமாகவே இருக்கிறாய், ஸந்தேஹமில்லை. (8)

(9)

पदार्थमेव जानामि नाद्यापि भगवन्स्फुटम् ।
अहं ब्रह्मेति वाक्यार्थं प्रतिपद्ये कथं वद ।। ९ ।।

பதா³ர்த²மேவ ஜாநாமி நாத்³யாபி ப⁴க³வந்ஸ்பு²டம் ।
அஹம் ப்³ரஹ்மேதி வாக்யார்த²ம் ப்ரதிபத்³யே கத²ம் வத³ ।।

பதார்த்தமேவ ஜாநாமி நாத்யாபி பகவந்ஸ்புடம் ।
அஹம் ப்ரஹ்மேதி வாக்யார்த்தம் ப்ரபத்யே கதம் வத ।।

ஹே பகவன், இன்னமும் சொற்களின் பொருளைக்கூட தெளிவாக (நான்) அறியவில்லை. 'நானே ப்ரஹ்மம்' என்ற வாக்யத்தின் பொருளை எப்படி நானறிவேன், சொல்லுங்கள். (9)

(10)

सत्यमाह भवानत्र विगानं नैव विद्यते ।
हेतुः पदार्थबोधो हि वाक्यार्थावगतेरिह ।। १० ।।

ஸத்யமாஹ ப⁴வாநத்ர விகா³நம் நைவ வித்³யதே ।
ஹேது: பதா³ர்த²போ³தோ⁴ ஹி வாக்யார்தா²வக³தேரிஹ ।।

ஸத்யமாஹ பவாநத்ர விகாநம் நைவ வித்யதே ।
ஹேது: பதார்த்தபோதோ ஹி வாக்யார்த்தாவகதேரிஹ ।।

நீ உண்மையையே சொல்கிறாய்; இதில் தவறேதும் (கருத்து வேறுபாடு) இல்லை. ஏனெனில், இங்கு வாக்யார்த்தத்தைத் தெரிந்துகொள்ள சொற்களின் பொருளைப் பற்றிய அறிவு காரணமாகும். (10)

‘த்வம்’ பதார்த்த விசாரம்

(11)

अन्तःकरणतद्वृत्तिसाक्षी चैतन्यविग्रहः ।
आनन्दरूपः सत्यः सन्किं नात्मानं प्रपद्यसे ।। ११ ।।

அந்த:கரணதத்³வ்ருத்திஸாக்ஷீ சைதந்யவிக்³ரஹ: ।
ஆநந்த³ரூப: ஸத்ய: ஸந்கிம் நாத்மாநம் ப்ரபத்³யஸே ।।

அந்த:கரண-தத்வ்ருத்தி-ஸாக்ஷி சைதந்ய-விக்ரஹ: ।
ஆனந்தரூப: ஸத்ய: ஸந்கிம் நாத்மாநம் ப்ரபத்யஸே ।।

மனதையும் அதன் எண்ணங்களையும் (சாட்சியாக) பார்த்துக் கொண்டு ஆனந்தஸ்வரூபனாய், மெய்ப்பொருளாய் சைதன்ய வடிவாய் இருந்தும்கூட த(உ)ன்னை (நீ) ஏன் அறிந்து கொள்ளவில்லை? (11)

(12)

सत्यानन्दस्वरूपं धीसाक्षिणं ज्ञानविग्रहम् ।
चिन्तयात्मतया नित्यं त्यक्त्वा देहादिगां धियम् ।। १२ ।।

ஸத்யாநந்த³ஸ்வரூபம் தீ⁴ஸாக்ஷிணம் ஜ்ஞாநவிக்³ரஹம் ।
சிந்தயாத்மதயா நித்யம் த்யக்த்வா தே³ஹாதி³கா³ம் தி⁴யம்।।

ஸத்யாநந்தஸ்வரூபம் தீஸாக்ஷிணம் ஜ்ஞாநவிக்ரஹம் ।
சிந்தயாத்மதயா நித்யம் த்யக்த்வா தேஹாதிகாம் தியம் ।।

உடல் முதலானவைகளில் உள்ள (நான் என்ற) அறிவை விட்டுவிட்டு ஸத்யாநந்த ஸ்வரூபமாகவும் அறிவுக்கு சாட்சியாகவும் ஞான ஸ்வரூபமாகவும் உள்ளதை ஆத்மாவாக (**தான்** என்று) எப்பொழுதும் சிந்திப்பாயாக. (12)

(13)

रूपादिमान्यतः पिण्डस्ततो नात्मा घटादिवत् ।
वियदादिमहाभूतविकारत्वाच्च कुम्भवत् ।। १३ ।।

ரூபாதி³மாந்யத꞉ பிண்ட³ஸ்ததோ நாத்மா க⁴டாதி³வத் ।
வியதா³தி³மஹாபூ⁴தவிகாரத்வாச்ச கும்ப⁴வத் ।।

ரூபாதிமாந்யத: பிண்டஸ்ததோ நாத்மா கடாதிவத் ।
வியதாதி-மஹாபூத-விகாரத்வாச்ச கும்பவத் ।।

இந்த உடல், வடிவம் முதலானவற்றுடன் கூடியதாக இருக்கின்ற காரணத்தினால் குடம் முதலானவை போல ஆகாயம் முதலான (பஞ்ச) மஹாபூதங்களின் மாறுபாடாக - கார்யமாக - இருப்பதனால் ஆத்மாவல்ல. (13)

(14)

अनात्मा यदि पिण्डोऽयमुक्तहेतुबलान्मतः ।
करामलकवत्साक्षादात्मानं प्रतिपादय ।। १४ ।।

அநாத்மா யதி³ பிண்டோ³(ऽ)யமுக்தஹேதுப³லாந்மத꞉ ।
கராமலகவத்ஸாக்ஷாதா³த்மாநம் ப்ரதிபாத³ய ।।

அநாத்மா யதி பிண்டோ(அ)ய-முக்த-ஹேது-பலாந்மத: ।
கராமலகவத்-ஸாக்ஷாத் ஆத்மாநம் ப்ரதிபாதய ।।

இந்த உடல் (தாங்கள்) கூறிய நியாயத்தின் வலிமையினால் ஆத்மாவல்ல என்று கருதப்படுவதாக இருக்குமேயானால் ஆத்மாவை உள்ளங்கை நெல்லிக்கனி போல நேராக விளக்கிச் சொல்லுங்கள். (14)

(15)

घटद्रष्टा घटाद्भिन्नः सर्वथा न घटो यथा ।
देहद्रष्टा तथा देहो नाहमित्यवधारय ।। १५ ।।

க⁴டத்³ரஷ்டா க⁴டாத்³பி⁴ந்ந꞉ ஸர்வதா² ந க⁴டோ யதா² ।
தே³ஹத்³ரஷ்டா ததா² தே³ஹோ நாஹமித்யவதா⁴ரய ।।

கடத்ரஷ்டா கடாத்பிந்ந: ஸர்வதா ந கடோ யதா ।
தேஹத்ரஷ்டா ததா தேஹோ நாஹமித்யவதாரய ।।

எப்படி (ஒரு) குடத்தைக் காண்பவன் குடத்திலிருந்து வேறானவன், (அவன்) எப்படியும் குடமாக இருக்க முடியாதோ, அப்படியே உடலைக் காண்பவனான நான் உடலாக இருக்க முடியாது என்று நிச்சயித்து அறிந்து கொள்.

(16)

एवमिन्द्रियदृङ्नाहमिन्द्रियाणीति निश्चिनु ।
मनो बुद्धिस्तथा प्राणो नाहमित्यवधारय ।। १६ ।।

ஏவமிந்த்^{3}ரியத்^{3}ருங்நாஹமிந்த்^{3}ரியாணீதி நிஶ்சிநு ।
மநோ பு^{3}த்^{3}தி^{4}ஸ்ததா^{2} ப்ராணோ நாஹமித்யவதா^{4}ரய ।।

ஏவமிந்திரியத்ருக்-நாஹமிந்த்ரியாணீதி நிச்சிநு ।
மநோ புத்திஸ்ததா ப்ராணோ நாஹமித்யவதாரயா ।।

இவ்வாறே புலன்களை பார்த்துக் கொண்டிருப்பவனாகிய நான் புலன்கள் அல்ல என்று நிச்சயம் செய்துகொள். அப்படியே மனம், அறிவு ப்ராணன் நானல்ல என்று உறுதிப்படுத்திக் கொள். (16)

(17)

संघातोSपि तथा नाहमिति दृश्यविलक्षणम् ।
द्रष्टारमनुमानेन निपुणं संप्रधारय ।। १७ ।।

ஸங்கா^{4}தோSபி ததா^{2} நாஹமிதி த்^{3}ருஶ்யவிலக்ஷணம் ।
த்^{3}ரஷ்டாரமநுமாநேந நிபுணம் ஸம்ப்ரதா^{4}ரய ।।

ஸங்காதோ(அ)பி ததா நாஹமிதி த்ருச்யவிலக்ஷணம் ।
த்ரஷ்டாரமநுமாநேந நிபுணம் ஸம்ப்ரதாரய ।।

அப்படியே (உடல், புலன்கள், மனம், அறிவு, ப்ராணன்) இவைகளின் கூட்டமும் நானல்ல என்று பார்க்கப்படுபவற்றுக்கு வேறான பார்ப்பவனை அநுமானத்தினால் நன்றாக அறிந்து உள்வாங்கிக் கொள்வாயாக. (17)

(18)

देहेन्द्रियादयो भावा हानादिव्यापृतिक्षमाः ।
यस्य संनिधिमात्रेण सोSहमित्यवधारय ।। १८ ।।

தே³ஹேந்த்³ரியாத³யோ பா⁴வா ஹாநாதி³வ்யாப்ருதிக்ஷமா: ।
யஸ்ய ஸந்நிதி⁴மாத்ரேண ஸோऽஹமித்யவதா⁴ரய ।।

தேஹேந்த்ரியாதயோ பாவா ஹாநாதி-வ்யாப்ருதிக்ஷமா: ।
யஸ்ய ஸந்நிதிமாத்ரேண ஸோऽஹமித்யவதாரய ।।

உடல், புலன்கள் முதலான பொருட்கள் எதனுடைய ஸந்நிதி மாத்திரத்தினாலேயே தள்ளுதல் முதலான செயல்களில் சக்தியுள்ளவையாக இருக்கின்றனவோ அதுதான் நான் என்று தீர்மானித்துக் கொள். (18)

(19)

अनापन्नविकारः सन्नयस्कान्तवदेव यः ।
बुद्ध्यादींश्चालयेत्प्रत्यक्सोऽहमित्यवधारय ।। १९ ।।

அநாபந்நவிகார: ஸந்நயஸ்காந்தவதே³வ ய: ।
பு³த்³த்⁴யாதீ³ம்ஶ்சாலயேத்ப்ரத்யக்ஸோऽஹமித்யவதா⁴ரய ।।

அநாபந்ந-விகார: ஸந்நயஸ்-காந்தவதேவ ய: ।
புத்த்யாதீம்ச்-சாலயேத்-ப்ரத்யக்-ஸோ(அ)ஹமித்யவதாரய ।।

இரும்புக்காந்தம் போலவே எவ்வித மாறுதலையும் அடையாமல் இருந்து கொண்டு அறிவு முதலானவற்றை எது சலனமடையச் செய்கிறதோ அந்த உள்ளிருக்கும் தத்வமே நான் என்று தீர்மானித்துக் கொள்வாயாக. (19)

(20)

अजडात्मवदाभान्ति यत्सान्निध्याज्जडा अपि ।
देहेन्द्रियमनःप्राणाः सोऽहमित्यवधारय ।। २० ।।

அஜடா³த்மவதா³பா⁴ந்தி யத்ஸாந்நித்⁴யாஜ்ஜடா³ அபி ।
தே³ஹேந்த்³ரியமந: ப்ராணா: ஸோऽஹமித்யவதா⁴ரய ।।

அஜடாத்மவதாபாந்தி யத்-ஸாந்நித்யாஜ்-ஜடா அபி ।
தேஹேந்த்ரியமந: ப்ராணா: ஸோ(அ)ஹமித்யவதாரய ।।

உடல், புலன்கள், மனம், ப்ராணன் இவை ஜடமானாலும், எவருடைய முன்னிலையில் ஜடத்தன்மை இல்லாதவை போல (சேதனத்தன்மை உள்ளவையாகத்) தோன்றுகின்றனவோ அதுவே நான் என்று தீர்மானித்துக் கொள்வாயாக! (20)

(21)

अगमन्मे मनोऽन्यत्र सांप्रतं च स्थिरीकृतम् ।
एवं यो वेद धीवृत्तिं सोऽहमित्यवधारय ।। २१ ।।

அக³மந்மே மநோऽந்யத்ர ஸாம்ப்ரதம் ச ஸ்தி²ரீக்ருதம் ।
ஏவம் யோ வேத³ தீ⁴வ்ருத்திம் ஸோऽஹமித்யவதா⁴ரய ।।

அகமந்மே மநோ(அ)ந்யத்ர ஸாம்ப்ரதம் ச ஸ்திரீக்ருதம் ।
ஏவம் யோ வேத தீவ்ருத்திம் ஸோ(அ)ஹமித்-யவதாரய ।।

என்னுடைய மனம் 'வேறொங்கோ போயிருந்தது, இப்பொழுது நிலைப்பட்டிருக்கிறது', என்றிவ்வாறு மனதின் செயல்பாட்டை எது அறிகிறதோ அதுதான் நான் என்று தீர்மானித்துக் கொள்வாயாக. (21)

(22)

स्वप्नजागरिते सुप्तिं भावाभावौ धियां तथा ।
यो वेत्त्यविक्रियः साक्षात् सोऽहमित्यवधारय ।। २२ ।।

ஸ்வப்ந-ஜாக³ரிதே ஸுப்திம் பா⁴வாபா⁴வௌ தி⁴யாம் ததா² ।
யோ வேத்த்யவிக்ரிய꞉ ஸாக்ஷாத் ஸோऽஹமித்யவதா⁴ரய ।।

ஸ்வப்ந-ஜாகரிதே ஸுப்திம் பாவாபாவௌ தியாம் ததா ।
யோ வேத்யவிக்ரிய: ஸாக்ஷாத் ஸோऽஹமித்யவதாரய ।।

கனவையும் விழிப்பையும் உறக்கத்தையும் அப்படியே மன எண்ணங்களின் இருப்பையும் இன்மையையும் எது, தான் மாறுபடாததாக இருந்துகொண்டு கண்கூடாக அறிகிறதோ அதுதான் நான் என்று தீர்மானித்துக் கொள்வாயாக. (22)

(23)

घटावभासको दीपो घटादन्यो यथेष्यते ।
देहावभासको देही तथाऽहं बोधविग्रहः ।। २३ ।।

க⁴டாவபா⁴ஸகோ தீ³போ க⁴டாத³ந்யோ யதே²ஷ்யதே ।
தே³ஹாவபா⁴ஸகோ தே³ஹீ ததா²ऽஹம் போ³த⁴விக்³ரஹ꞉ ।।

கடாவபாஸகோ தீப: கடாதந்யோ யதேஷ்யதே ।
தேஹாவபாஸகோ தேஹீ ததாऽஹம் போதவிக்ரஹ: ।।

குடத்தைப் பிரகாசப்படுத்தும் விளக்கானது குடத்தை விட வேறானதென்று எப்படி ஒப்புக்கொள்ளப்படுகிறதோ, அப்படியே உடலைப் பிரகாசப்படுத்துகிற

ஞான ஸ்வரூபமான - உடலை உடையவனான - ஆத்மா நான் (உடலுக்கு வேறானவன்.) (23)

(24)

पुत्रवित्तादयो भावा यस्य शेषतया प्रियाः ।
द्रष्टा सर्वप्रियतमः सोऽहमित्यवधारय ।। २४ ।।

புத்ரவித்தாத³யோ பா⁴வா யஸ்ய ஶேஷதயா ப்ரியா: ।
த்³ரஷ்டா ஸர்வப்ரியதம: ஸோऽஹமித்யவதா⁴ரய ।।

புத்ரவித்தாதயோ பாவா யஸ்ய சேஷதயா ப்ரியா: ।
த்ரஷ்டா ஸர்வப்ரியதம: ஸோ(அ)ஹமித்யவதாரய ।।

மகன்,செல்வம் முதலிய உடைமைகள் யாருக்கு அங்கமாயிருப்பதனாலேயே அன்புக்கு உரியனவாக இருக்கின்றனவோ அந்த அறிபவனான ஆத்மா (மற்ற) எல்லாவற்றையும் விட மிகவும் பிரியமானவர். அதுவே நான் என்று நிச்சயித்துக் கொள். (24)

(25)

परप्रेमास्पदतया मा न भूवमहं सदा ।
भूयासमिति यो द्रष्टा सोऽहमित्यवधारय ।। 25 ।।

பரப்ரேமாஸ்பத³தயா மா ந பூ⁴வமஹம் ஸதா³ ।
பூ⁴யாஸமிதி யோ த்³ரஷ்டா ஸோऽஹமித்யவதா⁴ரய ।।

பரப்ரேமாஸ்பததயா மா ந பூவமஹம் ஸதா ।
பூயாஸமிதி யோ த்ரஷ்டா ஸோ(அ)ஹமித்யவதாரய ।।

“நான் இல்லாமல் இருக்கக்கூடாது, எப்பொழுதும் இருக்க வேண்டும்”, என மேலான பிரியத்திற்கு விஷயமாக எந்த அறிபவனான ஆத்மா இருக்கிறதோ அதுதான் நான் என்று உணர்ந்து கொள்.

(26)

यः साक्षिलक्षणो बोधस्त्वम्पदार्थः स उच्यते ।
साक्षित्वमपि बोद्धृत्वमविकारितयाऽत्मनः ।। २६ ।।

ய: ஸாக்ஷிலக்ஷணோ போ³த⁴ஸ்த்வம்பதா³ர்த²: ஸ உச்யதே ।
ஸாக்ஷித்வமபி போ³த்³த்⁴ருத்வமவிகாரிதயாऽத்மந: ।।

ய: ஸாக்ஷி-லக்ஷணோ போத: த்வம்-பதார்த்த: ஸ உச்யதே ।
ஸாக்ஷித்வமபி போத்த்ருத்வ-மவிகாரிதயா-(ஆ)த்மந: ।।

ஸாக்ஷியாக இருக்கும் இலக்கணத்துடன் உள்ள அறிவு ஸ்வரூபம் எதுவோ அதுதான் த்வம் - நீ - என்ற சொல்லின் பொருளாகச் சொல்லப்படுகிறது. ஆத்மாவினுடைய ஸாக்ஷியாயிருக்கும் தன்மையும் தான் எவ்வித மாறுதலையும் அடையாமலே உள்ள அறியும் தன்மையே ஆகும். (26)

(27)

देहेन्द्रियमनः प्राणाहंकृतिभ्यो विलक्षणः ।
प्रोज्झिताशेषषड्भावविकारस्त्वंपदाभिधः ।। २७ ।।

தே³ஹேந்த்³ரியமந:ப்ராணாஹங்க்ருதிப்⁴யோ விலக்ஷண: ।
ப்ரோஜ்ஜி²தாஶேஷஷட்³பா⁴வவிகாரஸ்த்வம்பதா³பி⁴த⁴: ।।

தேஹேந்த்ரிய-மந: ப்ராணாஹங்க்ருதிப்யோ விலக்ஷண: ।
ப்ரோஜ்ஜிதாசேஷ-ஷட்பாவ-விகாரஸ்-த்வம்-பதாபித: ।।

உடல், புலன்கள், மனம், ப்ராணன், அஹங்காரம் இவற்றைக் காட்டிலும் வேறாகவும் ஆறுவித விகாரங்கள் அற்றதாகவும் உள்ளதுதான் த்வம் - நீ - என்ற சொல்லினால் குறிக்கப்படுவது. (27)

‘தத்’ பதார்த்த விசாரம்

(28)

त्वमर्थमेवं निश्चित्य तदर्थं चिन्तयेत्पुनः ।
अतद्व्यावृत्तिरूपेण साक्षाद्विधिमुखेन च ।। २८ ।।

த்வமர்த²மேவம் நிஶ்சித்ய தத³ர்த²ம் சிந்தயேத்புந: ।
அதத்³வ்யாவ்ருத்திரூபேண ஸாக்ஷாத்³விதி⁴முகே²ந ச ।।

த்வமர்த்தமேவம் நிச்சித்ய ததர்த்தம் சிந்தயேத் புந: ।
அதத்-வ்யாவ்ருத்தி ரூபேண ஸாக்ஷாத் விதிமுகேந ச ।।

இவ்வாறு ‘த்வம்’ - நீ - என்ற சொல்லின் பொருளை நிர்ணயித்தபின் ‘தத்’ - அது - என்ற சொல்லின் எது ‘அது’ அல்லவோ அதிலிலிருந்து விலக்கிக்காட்டும் முறையாகவும், நேரடியாகவே இலக்ஷணங்களைக் குறித்துக்காட்டும் முறையாகவும் சிந்திக்க வேண்டும். (28)

(29, 30)

निरस्ताशेषसंसारदोषोऽस्थूलादिलक्षणः ।
अदृश्यत्वादिगुणकः पराकृततमोमलः ।। २९ ।।

निरस्तातिशयानन्दः सत्यः प्रज्ञानविग्रहः ।
सत्तास्वलक्षणः पूर्णः परमात्मेति गीयते ।। ३० ।।

நிரஸ்தாஶேஷஸம்ஸாரதோ³ஷோऽஸ்தூ²லாதி³லக்ஷண꞉ ।
அத்³ருஶ்யத்வாதி³கு³ணக꞉ பராக்ருததமோமல꞉ ।।

நிரஸ்தாதிஶயாநந்த³꞉ ஸத்ய꞉ ப்ரஜ்ஞாநவிக்³ரஹ꞉ ।
ஸத்தாஸ்வலக்ஷண꞉ பூர்ண꞉ பரமாத்மேதி கீ³யதே ।।

நிரஸ்தாசேஷ-ஸம்ஸார-தோஷோ(அ)ஸ்தூலாதி-லக்ஷண: ।
அத்ருச்யத்வாதி-குணக: பராக்ருத-தமோமல: ॥

நிரஸ்தாதிசயாநந்த: ஸத்ய: ப்ரஜ்ஞாநவிக்ரஹ: ।
ஸத்தாஸ்வலக்ஷண: பூர்ண: பரமாத்மேதி கீயதே ।।

ஸம்ஸார தோஷங்கள் (பிறப்பு முதலான குறைகள்) எதுவும் இல்லாதவராக, ஸ்தூலம் (பருத்தல்) முதலான லக்ஷணங்கள் இல்லாதவராக, பார்க்கப்படும் தன்மை முதலான (புலன்களுக்கு விஷயமாகும் தன்மை) முதலான குணங்கள் இல்லாதவராக, அஞ்ஞானமாகிய அழுக்கை விலக்கியவராக, ஒப்புயர்வற்ற ஆனந்தராக, மெய்ப்பொருளாக, ஞான ஸ்வரூபமாக, இருப்பை இலக்ஷணமாகக் கொண்டவராக, பூர்ணமாக இருப்பவர் பரமாத்மா என்று சொல்லப்படுகிறார். (29, 30)

(31)

सर्वज्ञत्वं परेशत्वं तथा सम्पूर्णशक्तिता ।
वेदैः समर्थ्यते यस्य तद् ब्रह्मेत्यवधारय ।। ३१ ।।

ஸர்வஜ்ஞத்வம் பரேஶத்வம் ததா² ஸம்பூர்ணஶக்திதா ।
வேதை³꞉ ஸமர்த்²யதே யஸ்ய தத்³ ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ।।

ஸர்வஜ்ஞத்வம் பரேசத்வம் ததா ஸம்பூர்ண-சக்திதா ।
வேதை: ஸமர்த்யதே யஸ்ய தத் ப்ரஹ்மேத்யவதாரய ।।

யாருக்கு அனைத்தையும் அறியும் தன்மை, அனைத்தையும் ஆளும் தன்மை அப்படியே முழுமையான ஆற்றல் உடைத்திருத்தல் என இவையெல்லாம்

வேதங்களால் பொருத்தப்பட்டுள்ளதோ - வர்ணிக்கப்பட்டுள்ளதோ - அவரே ப்ரஹ்மம் என்று அறிந்து கொள்வாயாக. (32)

(32)

यज्ज्ञानात्सर्वविज्ञानं श्रुतिषु प्रतिपादितम् ।
मृदाद्यनेकदृष्टान्तैः तद्ब्रह्मेत्यवधारय ।। ३२ ।।

யஜ்ஜ்ஞாநாத்ஸர்வவிஜ்ஞாநம் ஶ்ருதிஷு ப்ரதிபாதி³தம் ।
ம்ருதா³த்³யநேகத்³ருஷ்டாந்தை: தத்³ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ।।

யத் ஜ்ஞாநாத் ஸர்வ-விஜ்ஞாநம் ச்ருதிஷு ப்ரதிபாதிதம் ।
ம்ருதாத்யநேக-த்ருஷ்டாந்தை: தத் ப்ரஹ்மேத்யவதாரய ।।

எதை அறிவதனால் அனைத்தையும் அறிந்ததாக ஆகுமோ, (எது) மண் முதலான பல உதாரணங்களால் வேத வாக்கியங்களால் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறதோ அதுவே ப்ரஹ்மம் என்று அறிந்து கொள்வாயாக. (32)

(33)

यदानन्त्यं प्रतिज्ञाय श्रुतिस्तत्सिद्धये जगौ ।
तत्कार्यत्वं प्रपञ्चस्य तद्ब्रह्मेत्यवधारय ।। ३३ ।।

யதா³நந்த்யம் ப்ரதிஜ்ஞாய ஶ்ருதிஸ்தத்ஸித்³த⁴யே ஜகௌ³ ।
தத்கார்யத்வம் ப்ரபஞ்சஸ்ய தத்³ ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ।।

யதாநந்த்யம் ப்ரதிஜ்ஞாய ச்ருதிஸ்-தத்-ஸித்தயே ஜகௌ ।
தத்-கார்யத்வம் ப்ரபஞ்சஸ்ய தத் ப்ரஹ்மேத்யவதாரய ।।

எதனுடைய முடிவற்ற தன்மையை வேதமானது உறுதி கூறிவிட்டு (ப்ரதிஞ்ஞை செய்துவிட்டு), அதை அடைவதற்காக பிரபஞ்சத்திற்கு அதனுடைய காரியமாக இருக்கும் தன்மையை சொல்லிற்றோ அதுவே ப்ரஹ்மம் என்று நிச்சயித்துக் கொள்வாயாக. (33)

(34)

विजिज्ञास्यतया यच्च वेदान्तेषु मुमुक्षुभिः ।
समर्थ्यतेऽतियत्नेन तद् ब्रह्मेत्यवधारय ।। ३४ ।।

விஜிஜ்ஞாஸ்யதயா யச்ச வேதா³ந்தேஷு முமுக்ஷுபி⁴: ।
ஸமர்த்²யதேऽதியத்நேந தத்³ ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ।।

விஜிஜ்ஞாஸ்யதயா யச்ச வேதாந்தேஷு முமுக்ஷுபி: ।
ஸமர்த்யதே(அ)தியத்நேந தத் ப்ரஹ்மேத்யவதாரய ।।

எது முக்தியடைய விருப்பமுடையவர்களால் நன்கு அறியப்பட வேண்டியதாக, வேதாந்தத்தில் (உபநிஷத்துகளில்) வெகுதீவிரமாக வலியுறுத்தப்படுகிறதோ, அதுவே ப்ரஹ்மம் என்று நிச்சயித்துக்கொள். (34)

(35)

जीवात्मना प्रवेशश्च नियन्तृत्वं च तान्प्रति ।
श्रूयते यस्य वेदेषु तद्ब्रह्मेत्यवधारय ।। ३५ ।।

ஜீவாத்மநா ப்ரவேஶஶ்ச நியந்த்ருத்வம் ச தாந்ப்ரதி ।
ஶ்ரூயதே யஸ்ய வேதே³ஷு தத்³ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ।।

ஜீவாத்மநா ப்ரவேசச்ச நியந்த்ருத்வம் ச தாந்ப்ரதி ।
ச்ரூயதே யஸ்ய வேதேஷு தத் ப்ரஹ்மேத்யவதாரய ।।

எதற்கு ஜீவாத்மாவாக (உடலில்) புகுதலும் அந்த ஜீவர்களை இயக்கும் தன்மையும் வேதங்களில் சொல்லப்படுகிறதோ அதுவே ப்ரஹ்மம் என்று தீர்மானித்துக் கொள்வாயாக. (35)

(36)

कर्मणां फलदातृत्वं यस्यैव श्रूयते श्रुतौ ।
जीवानां हेतुकर्तृत्वं तद्ब्रह्मेत्यवधारय ।। ३६ ।।

கர்மணாம் ப²லதா³த்ருத்வம் யஸ்யைவ ஶ்ரூயதே ஶ்ருதௌ ।
ஜீவாநாம் ஹேதுகர்த்ருத்வம் தத்³ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ।।

கர்மணாம் பலதாத்ருத்வம் யஸ்யைவ ச்ரூயதே ச்ருதௌ ।
ஜீவாநாம் ஹேது-கர்த்ருத்வம் தத் ப்ரஹ்மேத்யவதாரய ।।

ஜீவர்களுடைய (தர்ம, அதர்மச்) செயல்களுக்கு பலனைக் கொடுப்பவராயிருக்கும் தன்மையும் (அவர்களுடைய புண்ய பாபத்திற்கு ஏற்றாற் போல) செயல்களைச் செய்ய (தூண்டும்) காரணமாக இருக்கும் தன்மையும் எவருக்கே உண்டென்று வேதத்தில் காண்கிறதோ அதுவே ப்ரஹ்மம் என்று தீர்மானித்துக் கொள்வாயாக. (36)

வாக்யார்த்த விசாரம்

(37)

**तत्त्वंपदार्थौ निर्णीतौ वाक्यार्थश्चिन्त्यतेऽधुना ।
तादात्म्यमत्र वाक्यार्थस्तयोरेव पदार्थयोः ।। ३७ ।।**

தத்த்வம்பதா³ர்தௌ² நிர்ணீதௌ வாக்யார்த²ஶ்சிந்த்யதேऽது⁴நா ।
தாதா³த்ம்யமத்ர வாக்யார்த²ஸ்தயோரேவ பதா³ர்த²யோ: ।।

தத்த்வம்-பதார்த்தௌ நிர்ணீதௌ வாக்யார்த்த: சிந்த்யதேऽதுநா ।
தாதாத்ம்யமத்ர வாக்யார்த்த: தயோரேவ பதார்த்தயோ: ।।

தத் (அது), த்வம் (நீ) என்ற இரு சொற்களின் பொருள்கள் நிர்ணயிக்கப்பட்டு விட்டன. இப்பொழுது வாக்யத்தின் பொருள் சிந்திக்கப்படுகிறது. அதே இரண்டு சொற்களின் பொருள்களுக்கும் ஒன்றாயிருக்கும் தன்மை இங்கு வாக்கியத்தின் பொருளாகும். (37)

(38)

**संसर्गो वा विशिष्टो वा वाक्यार्थो नात्र संमतः ।
अखण्डैकरसत्वेन वाक्यार्थो विदुषां मतः ।। ३८ ।।**

ஸம்ஸர்கோ³ வா விஶிஷ்டோ வா வாக்யார்தோ² நாத்ர ஸம்மத: |
அக²ண்டை³கரஸத்வேந வாக்யார்தோ² விது³ஷாம் மத: ।।

ஸம்ஸர்கோ வா விசிஷ்டோ வா வாக்யார்த்தோ நாத்ர ஸம்மத: ।
அகண்டைக-ரஸத்வேந வாக்யார்த்தோ விதுஷாம் மத: ।।

இங்கு ஸம்ஸர்க்கமாவது விசிஷ்டமாவது வாக்கியத்தின் அர்த்தமாக ஏற்புடையதல்ல. அகண்ட ஏகரஸமாக இருப்பதே (மஹா)வாக்யத்தின் பொருள் என்பது அறிஞர்களுடைய கருத்தாகும். (38)

(39)

**प्रत्यग्बोधो य आभाति सोऽद्वयानन्दलक्षणः ।
अद्वयानन्दरूपश्च प्रत्यग्बोधैकलक्षणः ।। ३९ ।।**

ப்ரத்யக்³போ³தோ⁴ ய ஆபா⁴தி ஸோऽத்³வயாநந்த³லக்ஷண: ।
அத்³வயாநந்த³ரூபஶ்ச ப்ரத்யக்³போ³தைக⁴லக்ஷண: ।।

ப்ரத்யக்-போதோ ய ஆபாதி ஸோ(அ)த்வயாநந்த லக்ஷண: ।
அத்வயாநந்த-ரூபச்ச ப்ரத்யக்-போதைக-லக்ஷண: ।।

(நான் என்று) உள்ளிருக்கும் ஞானவுருவாக எவர் விளங்குகிறாரோ அவரே (தனக்கு வேறாக இன்னொன்றற்ற) ஆனந்தவுருவாய் (எங்கும்) இருப்பவர். (எங்கும்) இரண்டற்ற ஆனந்த வடிவாயிருப்பவரே உள்ளிருக்கும் ஞானவுருவாயிருப்பவர். (39)

(40)

इत्थमन्योन्यतादात्म्यप्रतिपत्तिर्यदा भवेत् ।
अब्रह्मत्वं त्वमर्थस्य व्यावर्तेत तदैव हि ।। ४० ।।

இத்த²மந்யோந்யதாதா³த்ம்யப்ரதிபத்திர்யதா³ ப⁴வேத் ।
அப்³ரஹ்மத்வம் த்வமர்த²ஸ்ய வ்யாவர்தேத ததை³வ ஹி ।।

இத்தமந்யோந்ய-தாதாத்ம்ய-ப்ரதிபத்தி: யதா பவேத் ।
அப்ரஹ்மத்வம் த்வமர்த்தஸ்ய வ்யாவர்தேத ததைவ ஹி ।।

இவ்விதமாக (ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும்) ஒன்றுக்கொன்றுள்ள ஒரே தன்மையின் ஞானம் எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதே த்வம் (நீ) என்பதன் பொருளான ஆத்மாவிற்கு ப்ரஹ்மமாக இல்லாத தன்மை (பரிச்சின்னத்வம் முதலான அனாத்ம தர்மங்கள்) நீங்கிவிடும். (40)

(41)

तदर्थस्य च पारोक्ष्यं यद्येवं किं ततः शृणु ।
पूर्णानन्दैकरूपेण प्रत्यग्बोधोऽवतिष्ठते ।। ४१ ।।

தத³ர்த²ஸ்ய ச பாரோக்ஷ்யம் யத்³யேவம் கிம் தத: ஶ்ருணு ।
பூர்ணாநந்தை³கரூபேண ப்ரத்யக்³போ³தோ⁴ऽவதிஷ்ட²தே ।।

ததர்த்தஸ்ய ச பாரோக்ஷ்யம் யத்யேவம் கிம் தத: ச்ருணு ।
பூர்ணாநந்தைக-ரூபேண ப்ரத்யக்-போதோऽவதிஷ்டதே ।।

அப்படியே பரோக்ஷத்தன்மை (கண்காணாமல் தொலைவில் இருக்கும் தன்மை) என்பதும் விலகிவிடும். இவ்விதம் விலகினால் அதனால் என்ன ?, சொல்கிறேன். (ஜீவன்) உள்ளிருக்கும் ஞானாத்மா (எங்கும் நிறைந்திருக்கும்) ஒன்றேயான பூர்ணாநந்த ஸ்வரூபமாக இருந்துவிடும். (41)

(42)

तत्त्वमस्यादिवाक्यं च तादात्म्यप्रतिपादने ।
लक्ष्यौ तत्त्वंपदार्थौ द्वावुपादाय प्रवर्तते ।। ४२ ।।

தத்த்மஸ்யாதி^{3}வாக்யம் ச தாதா^{3}த்ம்யப்ரதிபாத^{3}நே ।
லக்ஷ்யெள தத்த்வம்பதா^{3}ர்தெள^2 த்^{3}வாவுபாதா^{3}ய ப்ரவர்ததே ।।

தத்த்வமஸ்யாதி-வாக்யம் ச தாதாத்ம்ய-ப்ரதிபாதநே ।
லக்ஷ்யெள தத்-த்வம்-பதார்தெள த்வாவுபாதாய ப்ரவர்ததே।।

தத் த்வம் அஸி முதலான வாக்யங்கள் ஜீவாத்மாவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் உள்ள ஒன்றாயிருக்கும் தன்மையை எடுத்துச் சொல்வதில் தத் த்வம் (அது, நீ) என்ற சொற்களின் பொருளாக குறிக்கப்படுபவை. இரண்டு அர்த்தங்களையும் எடுத்துக் கொண்டு செயல்படுகின்றன. (42)

(43)

हित्वा द्वौ शबलौ वाच्यौ वाक्यं वाक्यार्थबोधने ।
यथा प्रवर्ततेऽस्माभिस्तथा व्याख्यातमादरात् ।। ४३ ।।

ஹித்வா த்^{3}வெள ஶப^{3}லெள வாச்யெள வாக்யம் வாக்யார்த^{2}போ^{3}த^{4}நே ।
யதா^{2} ப்ரவர்ததேऽஸ்மாபி^{4}: ததா^{2} வ்யாக்^{2}யாதமாத^{3}ராத் ।।

ஹித்வா த்வெள சபலெள வாச்யெள வாக்யம் வாக்யார்த்த-போதநே ।
யதா ப்ரவர்த்தே(அ)ஸ்மாபி: ததா வ்யாக்யாத-மாதராத் ।।

மஹாவாக்யமானது வாக்யத்தின் பொருளை விளக்குவதில், எப்படி வாச்யார்த்தங்களான (நேரடிப் பொருளான) கலந்துள்ள இருபொருட்களையும் விட்டுவிட்டுச் செயல்படுகிறதோ அப்படியே எம்மால் கவனத்துடன் விளக்கப்பட்டது. (43)

(44)

आलम्बनतया भाति योऽस्मत्प्रत्ययशब्दयोः ।
अन्तःकरणसंभिन्नबोधः स त्वंपदाभिधः ।। ४४ ।।

ஆலம்ப^{3}நதயா பா^{4}தி யோऽஸ்மத்ப்ரத்யயஶப்^{3}த^{3}யோ: ।
அந்த:கரணஸம்பி^{4}ந்நபோ^{3}த^4: ஸ த்வம்பதா^{3}பி^{4}த^4: ।।

ஆலம்பநதயா பாதி யோऽஸ்மத்-ப்ரத்யய-சப்தயோ: ।
அந்த:கரண-ஸம்பிந்ந-போத: ஸ த்வம்-பதாபித: ।।

எது நான் என்கிற எண்ணத்திற்கும் "நான்" என்கிற சொல்லுக்கும் ஆதாரமாக விளங்குகிறதோ அந்த மனதுடன் கலந்த அறிவே த்வம் - நீ - என்ற சொல்லினால் சொல்லப்படுவது. (44)

(45)

मायोपाधिर्जगद्योनिः सर्वज्ञत्वादिलक्षणः ।
पारोक्ष्यशबलः सत्याद्यात्मकस्तत्पदाभिधः ।। ४५ ।।

மாயோபாதி^{4}ர்ஜக^{3}த்^{3}யோநி: ஸர்வஜ்ஞத்வாதி^{3}லக்ஷண: ।
பாரோக்ஷ்யஶப^{3}ல: ஸத்யாத்^{3}யாத்மகஸ்தத்பதா^{3}பி^{4}த^{4}: ।।

மாயோபாதிர்ஜகத்யோநி: ஸர்வஜ்ஞத்வாதிலக்ஷண: ।
பாரோக்ஷ்யசபல: ஸத்யாத்யாத்மகஸ்தத்பதாபித: ।।

மாயையை உபாதியாகவுடையதும் உலகிற்குக் மூலமாகவும் ஸர்வஜ்ஞத்வம் முதலான லக்ஷணங்கள் உள்ளதாகவும் கண்காணா தொலைவில் இருப்பதான கலப்புள்ளதாகவும் ஸத்ஸ்வரூபமாகவும் இருப்பது ‘தத்’ - அது - என்ற சொல்லினால் சொல்லப்படுவது. (45)

(46)

प्रत्यक्परोक्षतैकस्य सद्वितीयत्वपूर्णता ।
विरुध्यते यतस्तस्माल्लक्षणा सम्प्रवर्तते ।। ४६ ।।

ப்ரத்யக்பரோக்ஷதைகஸ்ய ஸத்^{3}விதீயத்வபூர்ணதா ।
விருத்^{4}யதே யதஸ்தஸ்மால்லக்ஷணா ஸம்ப்ரவர்ததே ।।

ப்ரத்யக்-பரோக்ஷதைகஸ்ய ஸத்விதீயத்வ-பூர்ணதா ।
விருத்யதே யத: தஸ்மாத் லக்ஷணா ஸம்ப்ரவர்ததே ।।

ஒரே வஸ்துவிற்கு உள்ளே அறிவதாய் (ப்ரத்யக்) இருப்பதும் வெளியே அறியப்படாததாய் (பரோக்ஷமாய்) இருப்பதும் அப்படியே இரண்டாவது உள்ளதாகவும், (ஒன்றேயான) பரிபூர்ணமாக இருப்பதுமான தன்மை ஒன்றுக்கொன்று முரண்படுகிறது. இவ்வாறு இருப்பதனால் லக்ஷ்யார்த்தமானது ஏற்படுகிறது. (46)

(47)

मानान्तरविरोधे तु मुख्यार्थस्यापरिग्रहे ।
मुख्यार्थेनाविनाभूते प्रतीतिर्लक्षणोच्यते ।। ४७ ।।

மாநாந்தரவிரோதே^{4} து முக்^{2}யார்த^{2}ஸ்யாபரிக்^{3}ரஹே ।
முக்^{2}யார்தே^{2}நாவிநாபூ^{4}தே ப்ரதீதிர்லக்ஷணோச்யதே ।।

மாநாந்தர-விரோதே து முக்யார்த்தஸ்யாபரிக்ரஹே ।
முக்யார்த்தேநாவிநாபூதே ப்ரதீதி: லக்ஷணோச்யதே ।।

வேறுப்ரமாணங்களுக்கு விரோதம் ஏற்படும்பொழுது முக்ய அர்த்தத்தை - வாச்யார்த்தத்தை - (சொல்லின் பொருளை அப்படியே) எடுத்துக் கொள்ள இயலாத போது முக்ய அர்த்தத்திலிருந்து விலாகாதிருக்கின்ற அர்த்தத்தில் தோன்றுவது லக்ஷணா என்று சொல்லப்படுகிறது. (47)

(48)

तत्त्वमस्यादिवाक्येषु लक्षणा भागलक्षणा ।
सोऽयमित्यादिवाक्यस्थपदयोरिव नापरा ।। ४८ ।।

தத்த்வமஸ்யாதி³வாக்யேஷு லக்ஷணா பா⁴க³லக்ஷணா ।
ஸோSயமித்யாதி³வாக்யஸ்த²பத³யோரிவ நாபரா ।।

தத்த்வமஸ்யாதி-வாக்யேஷு லக்ஷணா பாகலக்ஷணா ।
ஸோ(அ)யமித்யாதி-வாக்யஸ்த-பதயோரிவ நாபரா ।।

தத் த்வம் அஸி முதலாள வாக்யங்களில் அவனே இவன் முதலான வாக்யங்களிலுள்ள இரு சொற்களுக்கும் எப்படியோ அப்படியே லக்ஷணையானது பாக (தியாக) லக்ஷணை ஆகும். வேறுவிதமான லக்ஷணைகள் பொருந்தாது. (48)

ஸாதனமும் பலனும்

(49)

अहं ब्रह्मेति वाक्यार्थबोधो यावद्दृढी भवेत् ।
शमादिसहितः तावदभ्यस्येच्छ्रवणादिकम् ।। ४९ ।।

அஹம் ப்³ரஹ்மேதி வாக்யார்த²போ³தோ⁴ யாவத்³த்³ருடீ⁴ ப⁴வேத் ।
ஶமாதி³ஸஹித: தாவத³ப்⁴யஸ்யேச்ச்²ரவணாதி³கம் ।।

அஹம் ப்ரஹ்மேதி வாக்யார்த்த-போதோ யாவத்-த்ருடீ பவேத் ।
சமாதி-ஸஹித: தாவதப்யஸ்யேத்-ச்ரவணாதிகம் ।।

நான் ப்ரஹ்மம் (ஆக இருக்கிறேன்) என்ற வாக்யப்பொருளின் ஞானம் எதுவரை திடமாக ஏற்படுமோ அதுவரை சமம் முதலான ஸாதனங்களுடன் கூடியவனாக (இருந்து) ச்ரவணம் (மனனம், நிதித்யாயனம்) முதலானவைகளை பயிற்சி செய்ய வேண்டும். (49)

(50, 51)

**श्रुत्याचार्यप्रसादेन दृढो बोधो यदा भवेत् ।
निरस्ताशेषसंसारनिदानः पुरुषस्तदा ।। ५० ।।**

**विशीर्णकार्यकरणो भूतसूक्ष्मैरनावृतः ।
विमुक्तकर्मनिगलः सद्य एव विमुच्यते ।। ५१ ।।**

ஶ்ருத்யாசார்யப்ரஸாதே³ந து³டோ⁴ போ³தோ⁴ யதா³ ப⁴வேத் ।
நிரஸ்தாஶேஷஸம்ஸாரநிதா³ந: புருஷஸ்ததா³ ।।

விஶீர்ணகார்யகரணோ பூ⁴தஸூக்ஷ்மைரநாவ்ருத: ।
விமுக்தகர்மநிக³ல: ஸத்³ய ஏவ விமுச்யதே ।।

ச்ருத்யாசார்ய-ப்ரஸாதேந த்ருடோ போதோ யதா பவேத் ।
நிரஸ்தாசேஷ-ஸம்ஸார-நிதாந: புருஷஸ்-ததா ।।

விசீர்ண-கார்ய-கரணோ பூதசூக்ஷ்மை: அநாவ்ருத: ।
விமுக்த-கர்ம-நிகல: ஸத்ய ஏவ விமுச்யதே ।।

வேதம், குரு இவர்களுடைய அருளினால் ஞானமானது எப்பொழுது உறுதியாக ஏற்படுகிறதோ அப்பொழுது சீவன் மிச்சமில்லாமல் ஸம்ஸாரம் முழுவதுமாக நீங்கினவனாக உடல், புலன்கள் எல்லாம் உலைந்து போனவனாக ஸூக்ஷ்ம பூதங்களால் சூழப்படாதவனாக வினையாகிய விலங்கிலிந்து விடுபட்டவனாக உடனடியாக முக்தி அடைகிறான். (50, 51)

(52, 53)

**प्रारब्धकर्मवेगेन जीवन्मुक्तो यदा भवेत् ।
कञ्चित्कालमनारब्धकर्मबन्धस्य संक्षये ।। ५२ ।।**

**निरस्तातिशयानन्दं वैष्णवं परमं पदम् ।
पुनरावृत्तिरहितं कैवल्यं प्रतिपद्यते ।। ५३ ।।**

ப்ராரப்³த⁴கர்மவேகே³ந ஜீவந்முக்தோ யதா³ ப⁴வேத் ।
கஞ்சித்காலமநாரப்³த⁴கர்மப³ந்த⁴ஸ்ய ஸங்க்ஷயே ।।

நிரஸ்தாதிஶயாநந்த³ம் வைஷ்ணவம் பரமம் பத³ம் ।
புநராவ்ருத்திரஹிதம் கைவல்யம் ப்ரதிபத்³யதே ।।

ப்ராப்த-கர்ம-வேகேந ஜீவன்முக்தோ யதா பவேத் ।
கஞ்சித்-காலமநாரப்த-கர்ம-பந்தஸ்ய ஸம்க்ஷயே।।

நிரஸ்தாதிசயாநந்தம் வைஷ்ணவம் பரமம் பதம் ।
புநராவ்ருத்தி-ரஹிதம் கைவல்யம் ப்ரதிபத்யதே ।।

ப்ராரப்த கர்மத்தின் வேகத்தினால் சிலகாலம் ஜீவன்முக்தனாக எதுவரை இருப்பானோ (அதன் பின்) ப்ராரப்த கர்மமல்லாத (ஸஞ்சிதம், ஆகாமி ஆகிய) கர்மங்களின் கட்டு அழிந்துவிட்டபடியால் ஒப்பற்ற ஆனந்தமாகவும் திரும்பி வருதல் இல்லாததாகவும் மஹாவிஷ்ணுவுக்கு - ஸர்வவியாபகமான ப்ரஹ்மத்திற்கு - உரியதும் கைவல்யமாகவும் உள்ள மேலான பதத்தை - நிலையை - அடைகிறான். (52, 53)

ஆதிசங்கரர் அருளிய வாக்யவ்ருத்தி முற்றுப்பெற்றது.

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel : https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

Our Mail ID : Info@voiceofjagadguru.com

Internet Archie :

Editorial Board		
Sri P A Murali	Hon' Advisor	Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringerī
Sri S N Krishnamurthy	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
Sri Tangirala Shiva Kumara Sharma	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
PujyaSri Swami Guruparananda	Hon' Editor	Founder Poornalaya, Chennai and Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Teni
Sri B Vijay Anand	Web Director	Coimbatore
Smt. B Srimathi Veeramani	Web Asst. Director & Chief Editor	Tirunelveli